DMCJMCOURTKUNNAM

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| C.C.No. 110/2025, Mangalamedu P.S. PW -7. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சபரி | Caste | : | - |
| Father/ Husband Name | : | கந்தசாமி | Calling | : | டிவி மெக்கானிக் |
| Village | : | சின்னாறு | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 23/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.02.2026 | | | | | |

எதிரி ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிவி மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா 1 ஐத் தெரியாது. கடந்த 2024ம் வருடத்தில் மார்ச் மாதம் ஒருநாள் சின்னாறில் உள்ள டிவிக் கடையில் நான் இருந்தேன். மாலை 07.00 மணியிலிருந்து 7.30 மணிக்குள் இந்த வழக்கு சம்பவத்தில் அடிப்பட்டு இறந்துபோன நபர் சின்னாறுக்கு சென்று கொண்டிருந்தார். எதிர்புறமாக பைக்கில் வந்த நபர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. விபத்து ஏற்படுத்தியவுடன் அந்த நபர் சென்றுவிட்டார். ஆஜர் எதிரி சம்பவ தினத்தன்று இருசக்கர வாகனம் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபரா என்று எனக்குத் தெரியாது. அடிப்பட்ட நபர் எந்த ஊர் என்பது எனக்குத் தெரியாது. அடிப்பட்ட பாண்டுரங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அழைத்தபோது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார். எனவே, குறுக்கு விசாரணை இல்லை.

| |
|---|
| Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.<br><br>District Munsif - Cum - Judicial Magistrate,<br>Kunnam. |

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| C.C.No. 110/2025 , Mangalamedu P.S. PW -8. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அண்ணாமலை | Caste | : | - |
| Father/ Husband Name | : | மருதமுத்து | Calling | : | பணி ஓய்வு (தபால் துறை) |
| Village | : | கீழக்குடிகாடு | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 74 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.02.2026 | | | | | |

எதிரி ஆஜர்.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன ஆணைமுத்து என்பவரை எனக்குத் தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

போலீசார் விசாரணையில் கடந்த 24.03.2024ம் தேதியன்று இரவு 07.30 மணியளவில் பாண்டுரங்கன் என்பவர் இருசக்கர வாகனம் TN 46 AD 4603 என்ற வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாகவும் எதிர்புறமாக TN 46 L 4911 என்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாக கவனக்குறைவாக எந்தவித சமிக்கையும் செய்யாமல் வாகனத்தை திருப்பியதால் விபத்து ஏற்பட்டதாகவும் அந்த விபத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தரப்பு மறு விசாரணை இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM, COURT KUNNAM